<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், போச்சம்பள்ளி.</u>

<u>(அத்தியாயம் XXII குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம்)</u>

**சி.சி.எண்: 101/2015**

**அ.சா : 3, அபேகுமார்தாஸ்**

**1873 ஆம் ஆண்டின் மெய்யுறுதி சட்டத்தின் படி கீழ்க்கண்ட சாட்சிக்கு மெய்யுறுதி செய்து வைக்கப்பட்டது. நாள். 20.06.2024.**

**1,2,4 எதிரிகள் ஆஜர்.**

**<u>சாட்சி மனுவின் பேரில் மீண்டும் திரும்ப அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை</u>**

எனக்கு தமிழ் தெரியாது. ஆங்கிலம் எழுத படிக்க தெரியும். நான் சம்பவ இடத்திற்கு காலை 08.00 முதல் 09.00 மணியளவில் சென்றேன். நான் சம்பவ இடத்திற்கு சென்றபோது அப்போது அங்கு யாரும் இல்லை. புலன் விசாரணை அதிகாரி பெயர் எனக்கு தெரியாது. மத்தூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம். அன்றைய தினமே போலீசார் என்னை விசாரித்தார்கள். எங்கள் வங்கி அலுவலகத்தில் வைத்து என்னை விசாரித்தார்கள். என்னை ஆங்கிலத்தில் தான் விசாரணை அதிகாரி விசாரித்தார்.

நான் சொன்னது போல் புலன் விசாரணை அதிகாரி விசாரணை மேற்கொள்ளவில்லை என்று சொன்னால் சரியல்ல. வங்கி மேலாளர் கேட்டுக்கொண்டதற்கினங்க சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

சாட்சியிடம் வழக்கறிஞர் ஆங்கிலத்தில் கேள்வி கேட்டு சாட்சி ஆங்கிலத்தில் பதில் கூறியதை என்னால் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு தட்டச்சருக்கு கூறப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டது. பின்னர் சாட்சியத்தின் சாரம்சம் சாட்சிக்கு எடுத்து கூறப்பட்டு அவர் சரியென ஒப்புக்கொண்டார்.

ஒம்/– எஸ்.வி.சண்முகநாதன், பி.காம்.,பி.எல்.,
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நடுவர், போச்சம்பள்ளி. கிருஷ்ணகிரி மாவட்டம்.

**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், போச்சம்பள்ளி.</u>**

**<u>(அத்தியாயம் XXII குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம்)</u>**

**சி.சி.எண்: 101/2015**

**அ.சா : 4, ராஜேஸ்வரி**

**1873 ஆம் ஆண்டின் மெய்யுறுதி சட்டத்தின் படி கீழ்க்கண்ட சாட்சிக்கு மெய்யுறுதி செய்து வைக்கப்பட்டது. நாள். 20.06.2024.**

**1,2,4 எதிரிகள் ஆஜர்.**

**<u>சாட்சி மனுவின் பேரில் மீண்டும் திரும்ப அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை</u>**

சம்பவம் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது. சம்பவ இடத்திற்கு நான் செல்லவில்லை. மேலாளர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க சாட்சியம் அளிக்கிறேன். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

சாட்சி கூறியதை என்னால் தட்டச்சருக்கு
கூறப்பட்டு சாட்சியின் முன் சாட்சிக்கு படித்து
காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு, சரியென
ஒப்புக்கொண்டார்.

ஒம்/– எஸ்.வி.சண்முகநாதன், பி.காம்.,பி.எல்.,
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நடுவர், போச்சம்பள்ளி. கிருஷ்ணகிரி மாவட்டம்.

**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், போச்சம்பள்ளி.</u>**

**<u>(அத்தியாயம் XXII குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம்)</u>**

**சி.சி.எண்: 101/2015**

**அ.சா : 5**

| | | |
|---|---|---|
| பெயர் | : | அஜய் |
| தகப்பனார் /கணவர்பெயர் | : | ஜெகதீஸ்வரன் |
| ஊர் | : | திருச்சூர், கேரளா |
| வட்டம் | : | |
| ஆதார் எண் | : | |
| தொழில் | : | உதவி கிளை மேலாளர். |
| மதம் | : | |
| வயது | : | 36 |

**1873 ஆம் ஆண்டின் மெய்யுறுதி சட்டத்தின் படி கீழ்க்கண்ட சாட்சிக்கு மெய்யுறுதி செய்து வைக்கப்பட்டது. நாள். 20.06.2024.**

**1,2,4 எதிரிகள் ஆஜர்.**

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது திருச்சூர், கேரளாவில் உதவி கிளை மேலாளராக இந்தியன் வங்கியில் பணி செய்து வருகிறேன். சம்பவத்தின் போது கண்ணன்டஅள்ளி இந்தியன் வங்கியில் கிளர்க்காக பணிசெய்தேன். கடந்த 12.01.2015ம் தேதி இந்தியன் வங்கி கண்ணன்டஅள்ளி கிளையில் ATM ல் திருட்டு முயற்சி நடந்ததாக கிளை மேலாளர் தினேஷ்குமார் எனக்கு தெரிவித்தார். நான் காலை 09.00 மணியளவில் வங்கிக்கு வந்து சம்பவ இடத்தைபார்த்தேன். அப்போது ATM சேதப்படுத்தப்பட்டு இருந்தது. ஆனால் உடைக்கவில்லை.

இது குறித்து அ.சா.1 கிளை மேலாளர் மத்தூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். அ.சா.1 முதல் அ.சா.4 ஆகியோர்கள் சம்பவத்தின் போது என்னோடு வங்கியில் பணிபுரிந்தவர்கள் ஆவார்கள். ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

சம்பவம் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது. மறுநாள் காலை 09.00 மணிக்கு சம்பவ இடம் வந்து பார்த்தேன். சம்பவம் எவ்வாறு நடைபெற்றது என்று எனக்கு

தெரியாது. வழக்கு விவரங்கள் மேலாளர் சொல்லி தான் தெரியும். அவர் கேட்டுக்கொண்டதன் பேரில் தான் சாட்சியம் அளிக்கிறேன்.

சாட்சி கூறியதை என்னால் தட்டச்சருக்கு
கூறப்பட்டு சாட்சியின் முன் சாட்சிக்கு படித்து
காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு, சரியென
ஒப்புக்கொண்டார்.

ஓம்/- எஸ்.வி.சண்முகநாதன், பி.காம்.,பி.எல்.,
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நடுவர், போச்சம்பள்ளி. கிருஷ்ணகிரி மாவட்டம்.